இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 28-03-2025

# “பணப்பிரச்சினை அல்ல, இனப் பிரச்சினை”

மும்மொழித் திட்டம் தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் விவாதம் வந்த போது, **“தமிழும் ஆங்கிலமும் தான் தமிழ்நாட்டின் இரு மொழிக் கொள்கை. அதில் எந்த மாற்றமும் இல்லை. இது மொழிக் கொள்கை மட்டுமல்ல, நமது வழிக் கொள்கையும் விழிக் கொள்கையும் இதுதான். எந்தப் பழிச் சொல் சொன்னாலும் இந்த உயிர்க் கொள்கையில் விட்டுத் தர மாட்டோம். விட்டு விலக மாட்டோம்”** என்று உறுதிபடச் சொல்லி இருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

“இந்தியை ஏற்காவிட்டால் பணம் தர மாட்டோம் என்று மிரட்டினாலும் - பணமே வேண்டாம் - தமிழ் மொழி காப்போம்” என்ற உறுதியை அளித்த முதலமைச்சர் அவர்கள், **“இது பணப்பிரச்சினை அல்ல, நம் இனப்பிரச்சினை. நம் தமிழை, தமிழினத்தை, தமிழ்நாட்டு மாணவக் கண்மணிகளை, இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை ஆகும். இவர்கள் நிதி தரவில்லை என்பதற்காக இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெறும் கொத்தடிமை ஆட்சியல்ல இது. தடைக்கற்கள் உண்டு என்றால் அதை உடைத்து எரியும் தடந்தோள்கள் உண்டென்று சொல்லும் திராவிட மாடல் ஆட்சி இது”** என்றும் உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழும் ஆங்கிலமும் என்ற இருமொழித் திட்டத்தால்தான் நம்முடைய தமிழ்நாடு இந்தளவுக்கு வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இதில் மும்மொழித் திட்டம் என்ற பெயரால் சதி செய்யப் பார்க்கிறது பா.ஜ.க. தலைமை. இந்தியை நுழைப்பதற்கான சதித் திட்டம் தான், ‘மும்மொழித் திட்டம்’ ஆகும்.

முதலில் மும்மொழி என்று சொல்வார்கள். பிறகு அதில் இருந்து ஆங்கிலத்தை அகற்றுவார்கள். பின்னர் அதில் இருந்து தமிழை அகற்றுவார்கள். இறுதியாக மிஞ்சி இருக்கப் போவது இந்தி மட்டும் தான். இறுதியாக அது இந்தி என்ற ஒரு மொழிக் கொள்கையாக மாறி விடும். ‘இந்தியாவை ஹிந்தியா’ ஆக்கும் சூழ்ச்சிதான் இது. இந்தி மொழி வழியாக தமிழ் மொழியை அழிக்கும் சதி இது. அதனால் தான் இது, ‘இனப்பிரச்சினை’ என்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

1938 பிப்ரவரியில் காஞ்சியில் நடந்த மாநாட்டில் பேசும்போது தான், ‘இது மொழி திணிப்பு மட்டுமல்ல, கலாச்சார படையெடுப்பு. வடநாட்டாரின் ஆதிக்கப்படையெடுப்பு’ என்றார் பெரியார். ‘இது அரசியல் போராட்டம் அல்ல, கலாச்சாரப் போராட்டம்’ என்றுதான் பெரியார் வலியுறுத்திச் சொன்னார். ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம் எழுப்பினார். **“ஓ தமிழனே, தமிழ் அன்னை உன் கடமையைச் செய்ய அழைக்கிறாள். ஆரியக் கொடுமையிலிருந்து தன்னை விடுவித்து விடும்படி ஓலமிட்டுக் கொண்டிருக்கிறாள். தாய் நன்றி கொன்ற மகனும் தாய்ப்பணிக் கடமை கொன்ற மகனும் மனிதனாவானா?” என்று கேட்டார். தமிழ்த்தாயின் துகிலை இராஜாஜி உருவுவது மாதிரியும், ஒரு கையில் தொல்காப்பியத்தையும் இன்னொரு கையில் திருக்குறளையும் வைத்துள்ள பெண்ணை இராஜாஜி கத்தியால் குத்துவது மாதிரியும், இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்ட தமிழ்த்தாயை இந்தி பாம்பு கடிப்பதாகவும் கருத்துப்படங்கள் போட்டார்.**

அதிகாரத்தில் இருப்பவர்கள் திணித்தால் அந்த மொழிக்கு அனைத்துத் தகுதியும் தானாகக் கிடைத்துவிடும், எனவேதான் இந்தியை ஒரு மொழிப்பாடமாகக் கூட திணிக்க அனுமதிக்கக் கூடாது என்றார் பேரறிஞர் அண்ணா. இந்தியா முழுவதும் ஒரே பொதுவான எழுத்தை, தேவநாகரி வடிவ எழுத்தை பயன்படுத்த வேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் சொன்னதை குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் வலியுறுத்தினார். இதனைக் கடுமையாக எதிர்த்தார் பேரறிஞர் அண்ணா. **“ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கு என தனி ஒரு எழுத்து வடிவமும், பெரிய நூல்களும் இருந்து வருகிறது. தமிழ் மொழியிலுள்ள திருக்குறளையோ, தொல்காப்பியத்தையோ தேவநாகரி எழுத்தில் எழுதிப் படிக்கச் சொன்னால் திருக்குறள் என்ற ஒரு நூல் தமிழ் மொழியில் கிடையாது என்று கூறக்கூடிய அளவுக்கு அதன் பொருட்செறிவும் அமைப்பும் அற்று இல்லாதொழியும்” என்றார் அண்ணா.**

தமிழனுடைய பண்பாட்டை அழிக்க, அவனது கலாச்சாரத்தை அழிக்க, தமிழ் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை ஒழிக்கவே இந்தியைத் திணிக்கிறார்கள் என்றார் அண்ணா. இது வெறும் மொழிப்போராட்டமல்ல, தமிழனின் பண்பாட்டைக் காக்கும் போராட்டம் என்றார் அண்ணா.

**“தமிழர்களைச் சூத்திரர்கள் ஆக்கிய சமஸ்கிருதம் தாம் இந்தி ஆதிக்கமாக வருகிறது” என்றார் தமிழினத் தலைவர் கலைஞர். ‘இந்தி எதிர்ப்புப் போர் என்பது மொழிப்போர் மட்டுமல்ல; இது இன உரிமைப் போர். மொழி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர். இதில் வெற்றி தோல்வி எந்தப் பக்கம் தாவினாலும் மானத்தைக் காப்பாற்ற ஒரு போர் நடந்தது என்பது மட்டும் சரித்திரத்தில் இடம் பெற்றால் போதும். வருங்காலச் சந்ததியினருக்கு அந்த வரிகள் வேல்களாகும். படை முழக்கமாகும்” என்று பேசினார் கலைஞர்.**

இவை அனைத்தையும் வழிமொழியும் வகையில்தான், ‘இது இனப் பிரச்சினை’ என்று சொல்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

### 100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம்!

## கழகத்தின் சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெறுகிறது! கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 28-**

**100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் நாளை (29.3.2025 - சனிக்கிழமை) “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும் என கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 09.03.2025 அன்று காலை, சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் நடைபெற்ற “தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்” கழக மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது, “தமிழ்நாடு மாநில நலன் குறித்து கேள்விகள் எழுப்பி, அதற்குரிய பதிலை ஒன்றிய அரசிடம் பெற வேண்டும்” என்றும்; அத்துடன் ‘ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காதது’ குறித்து கேள்வி எழுப்பிட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, “ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காதது குறித்து 25.03.2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் நாளை (29.3.2025 - சனிக்கிழமை) காலை அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலைவாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தத்தமது மாவட்டங்களில் நடை பெறும் ஆர்ப்பாட்டம் குறித்த விவரத்தை தலைமைக் கழகத்திற்கு உடனே தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல்

# தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

*தஞ்சாவூர், மார்ச் 28-*

*தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தலைமைக் கழக அறிவிப்பினை ஏற்று 100 நாள் வேலை உறுதி திட்டம் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி அளவுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காதது குறித்து 25.03.2025 அன்று தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கு எந்த பதிலையும் தராமலும், தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காமலும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தி.மு.க சார்பில் நாளை (29.03.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட 12 கழக ஒன்றியங்களிலும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட கீழ்க்கண்ட 24 இடங்களில் 100 நாள் வேலை வாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.*

*திருப்பனந்தாள் கிழக்கு பந்தநல்லூர், குலசேகர நல்லூர், திருப்பனந்தாள் மத்தியம் கதிராமங்கலம், குறிச்சி, திருப்பனந்தாள் மேற்கு துகிலி, இடையாநல்லூர்.*

*திருவிடைமருதூர் வடக்கு நரசிங்கம்பேட்டை, திருநீலக்குடி, திருவிடைமருதூர் தெற்கு நாச்சியார் கோவில், திருச்சேறை, கும்பகோணம் கிழக்கு கோவிலாச்சேரி, கடிச்சம்பாடி, கும்பகோணம் மத்தியம் அண்ணலக்ரஹாரம், பெருமாண்டி, கும்பகோணம் மேற்கு மருதாநல்லூர் திருவலஞ்சுழி, பாபநாசம் வடக்கு கபிஸ்தலம், ஓலைபாடி, பாபநாசம் தெற்கு பசுபதிகோவில், வீரமாங்குடி, அம்மாபேட்டை வடக்கு கீழகோவில்பத்து, திருக்கரக்காவூர், அம்மாபேட்டை தெற்கு சாலியமங்கலம், அருந்தவபுரம் ஆகிய இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற உள்ளது.*



*அது சமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிரவாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்க மாநகர, ஒன்றிய பேரூர், பகுதி கழக செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்வதுடன் தங்கள் கண்டனத்தையும் பதிவு செய்திடவும் தங்களது ஒன்றியத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்த விபரங்களை தலைமை கழகத்திற்கு அனுப்ப ஏதுவாக மாவட்ட கழகத்திற்கு உடன் தெரிவித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*குறிப்பு : கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் மாநகரத்தைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்துக்கொள்ளவும், மற்ற சட்டமன்ற தொகுதிகளில் அந்தந்த பேரூர் நிர்வாகிகளுடன் கலந்து கொள்ளவும்.*

*இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

# மகனே மனோஜ்! மறைந்து விட்டாயா?



பாரதிராஜாவின்
பாதி உயிரே!
பாதிப் பருவத்தில்
பறந்து விட்டாயா?

'சிங்கம் பெத்த பிள்ளையின்னு
தெரியவப்போம் வாடா வாடா'
என்று உனக்கு
அறிமுகப் பாடல் எழுதினேனே

சிங்கம் இருக்கப்
பிள்ளைநீ போய்விட்டாயா?

உன் தந்தையை
எப்படித் தேற்றுவேன்?

"எனக்குக் கடன் செய்யக்
கடமைப்பட்டவனே!
உனக்கு நான் கடன்செய்வது
காலத்தின் கொடுமைடா" என்று
தகப்பனைத் தவிக்கவிட்டுத்
தங்கமே இறந்துவிட்டாயா?

உன் கலைக் கனவுகள்
கலைந்து விட்டனவா?

முதுமை மரணம் இரண்டும்
காலத்தின் கட்டாயம்தான்.
ஆனால், முதுமை
வயதுபார்த்து வருகிறது;
மரணம் வயதுபார்த்து
வருவதில்லை

சாவுக்குக் கண்ணில்லை

எங்கள் உறக்கத்தைக்
கெடுத்துவிட்டவனே!
உன் உயிரேனும்
அமைதியில் உறங்கட்டும்

-கவிப்பேரரசு
வைரமுத்து

